# திறன் விருத்திப் பயிற்சி நெறி

ஞாயிற்றுக்கிழமை, 02 டிசெம்பர் 2012 10:52 0 COMMENTS




(எம்.பரீத்)

யுத்தத்தினால் இடம்பெயர்ந்த குடும்பங்களில் வாழும் இளைஞர் யுவதிகளுக்கு NVQ தரம் 3 இற்கான கட்டிட நிர்மாணவினைஞர் மற்றும் மரவேலைவினைஞர் ஆகிய துறைகளில் திறன் விருத்திப் பயிற்சி நெறி முதற் தடவையாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வு திருகோணமலை நிலாவெளியில் அமைந்திருக்கும் சேவா லங்கா மன்றத்தின் பயிற்சி நிலையத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்றது.

கிழக்கு மாகாண சிரேஷ்ட செயலாளர் டி.எம்.எஸ்.அபயகுணவர்த்தனவால் இந்நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது. இப்பயிற்சி நெறியானது 40 மாணவர்களைக் கொண்ட 9 மாதகால முழு நேர பயிற்சியாகும்.

இந்நிகழ்வில், இப்பயிற்சிக்கான நிதியுதவியை வழங்கும் ஜப்பான் நிறுவனமான ஜாடி மற்றும் ஜெய்கா நிறுவனங்களின் உத்தியோகத்தர்களான கிரோடா தனகா, கிடோயுகி டாகிடா, கிரோயுகி அபே, சுன்சுகே குதிஹரா, பேஜ் வின்ட்ஜ் ஜப்பான் நிறுவன உத்தியோகத்தர் அயா சொனடா, அஒபா மொறிடா, மற்றும் சேவா லங்கா மன்ற உத்தியோகத்தர்கள், சர்வ மன்றத் தலைவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.






Find us on Facebook

Tamil Mirror

Like

7,302 people like **Tamil Mirror**.

Roshan Yaseer Thangaraj Haja Puttalam Ni

Nawasdeen Nisha Essa Rame Mohammed

Facebook social plugin










**Views**: 207 0 Like 0

## கருத்து

Name (required)

E-mail (required, but will not display)

உங்கள் கருத்தை இங்கே தமிழில் type செய்யலாம். உதாரணத்திற்காக இலங்கை என்று type செய்வதற்கு ilankai என்று type செய்து ஒரு இடைவெளி விடவும். அதாவது ilankai=இலங்கை.

1000 symbols left

Notify me of follow-up comments

Send


Copyright © 2012 Wijeya Newspapers Ltd.